www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**

*(Chapter XXIII code of Criminal Procedure)*

In the Court of Principal Special Judge for CBI Cases

VIII Additional City Civil Court, Chennai – 104.

Calendar Case } **C.C.No.6/2019**

Prosecution Witness **PW: 13 (LW-4)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Mr. S. Ramesh | Caste | : |
| Father's Name | : Mr. A. Sudalai | Calling | : VAO |
| Village | : Cherakulam | Religion | : Hindu |
| Taluk | : Srivaikundam | | |
| Age | : 38 years | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 27th day of March, 2023.

**(A1 absent. Petition under section 317 Cr.P.C. is filed and allowed. A2 discharged as per order in Crl.M.P.No.5397/2019)**

**முதல் விசாரணை -**

நான் தற்சமயம் சேரக்குளம் கிராமம், திருவைகுண்டம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலராக 2021 முதல் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வடக்கு காரசேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன், அந்த சமயத்தில் பூவானி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் 01.10.2015 முதல் கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். அக்டோபர் 2015 ம் வருடம், என்னுடைய வட்டாட்சியர் திரு. இளங்கோ அவர்கள் கேட்டுக்கொண்டதால் கிராம கணக்குகளான 'A' பதிவேடு, 10 (1) சிட்டா, 10 (1) அடங்கல், FMB ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை சிபிஐ அதிகாரிகளுக்கு கொடுத்தேன். மேற்படி ஆவணங்கள் பூவானி கிராமம், சர்வே எண் 7/2B மற்றும் 7/4B 0.88.5 ஹெக்டர் மற்றும் 0.36.0 ஹெக்டர் அளவிலான திரு. பரமசிவன், S/o. அழகர் அவர்களுக்கு சொந்தமான புஞ்சை நிலத்திற்கானது, தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் சிபிஐ அதிகாரிகளுக்கு ஆவணங்கள் வழங்கியதற்காக கொடுக்கப்பட்ட இரசீது Memo அ.சா.ஆ.**39** (ஒரு தாள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது தாசில்தார் வழங்கிய அங்கீகார கடிதமாகும், அது அ.சா.ஆ.**40** (ஒரு தாள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது 'A' Register நகலானது சர்வே எண் 7/2B, 7/4B திருமதி. இசக்கியம்மாள் பெயரில் உள்ள

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN — Digitally signed by K DHANASEKARAN Date: 2023.03.27 17:50:37 +0530

Principal Special Judge for CBI cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-13.pdf

www.ecourtsindia.com



சான்றிட்ட நகலாகும், அது அ.சா.ஆ.**41 (ஒரு தாள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது சர்வே எண் 7/2B, 7/4B நிலத்திற்கான திரு. அழகர் மகன் திரு. பரமசிவன் பெயரில் உள்ள சிட்டா சான்றிட்ட நகல், அது அ.சா.ஆ.**42 (ஒரு தாள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது பூவானி கிராமம், புல எண் 7க்கான புலவரைபடம் சான்றிட்ட நகல் ஆகும், அது அ.சா.ஆ.**43 (ஒரு தாள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது சர்வே எண் 7/2B, 7/4B க்கான 10 (1) அடங்கல் சான்றிட்ட நகல் ஆகும். அது அ.சா.ஆ.**44 (பத்து தாள்கள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது, சர்வே எண் 7/2B, 7/4B க்கான திரு. பரமசிவன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் பயிர் சாகுபடி எதுவும் நடைபெறவில்லை என்பதற்கு நான் அளித்த சான்றிதழ், அ.சா.ஆ.**45 (ஒரு தாள்)**, அந்த ஆவணத்திற்கு எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. அந்த ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. திரு. பரமசிவன் மேற்படி நிலத்தை வாங்குவதற்கு முன்பு அந்த நிலம் திருமதி. இசக்கியம்மாள் பெயரில் இருந்தது. மேற்படி சான்றாவணங்கள் நானும், எனது தாசில்தார் திரு. இளங்கோவும் சான்றொப்பம் செய்துள்ளோம். சிபிஐ அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

13.11.2011ம்தேதி சர்வே எண் 7/2B, 7/4B நிலத்திற்கான திரு. அழகர் மகன் திரு. பரமசிவன் பெயருக்கு கிரைய ஆவணங்கள் கொடுத்து பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். திரு. இசக்கியம்மாள் என்பவர் திரு. பரமசிவத்திற்கு பெரியம்மாள் உறவின்முறை என்று பத்திரங்கள் வாயிலாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணையில் நான் சொன்ன திரு. பரமசிவத்திற்கு சொந்தமான நிலங்களில் 20 வருடங்கள் பழமைவாய்ந்த 16 வேப்பமரங்கள் இருந்தது என்றும், பின்னாளில் அவை வெட்டி விற்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN — Digitally signed by K DHANASEKARAN Date: 2023.03.27 17:50:45 +0530

Principal Special Judge for CBI cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-13.pdf

தெரியாது. மேற்படி மரங்கள் வெட்டப்பட்டது என்றும், அதை விற்பனை செய்து திரு. பரமசிவத்திற்கு ரூ.3 இலட்சம் வருமானம் கிடைத்தது. அது 2012 ம் ஆண்டில் நடந்தது என்றும், மேற்படி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை -

20 வருடங்கள் பழமைவாய்ந்த மரங்களை வெட்டி விற்கவேண்டும் என்றால் வனத்துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான்.

மறு குறுக்கு விசாரணை -

திரு. பரமசிவனிற்கு சொந்தமான இடத்திலுள்ள மரங்களை வெட்டி விற்க திருவைகுண்டம் வனத்துறை அதிகாரியிடமிருந்து அனுமதி பெறவேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் என்ற முறையில் நாங்கள் மரங்கள் இருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்தால் வனத்துறை அதிகாரிகள் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கலாம். 2012 ம் ஆண்டு பூவானி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் யார் என்று எனக்கு தெரியாது.

Sd./

Signature of witness

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN — Digitally signed by K DHANASEKARAN Date: 2023.03.27 17:50:52 +0530

Principal Special Judge for CBI cases, Chennai

www.ecourtsindia.com

Copy View

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-13.pdf